சார்பு நீதிமன்றம் மதுராந்தகம்
MCOP No. 23/2023

2025ம் ஆண்டு நவம்பர் மாதம் 13ம் நாள் PW1 தரப்பு சாட்சியின் வாக்குமூலம் 1969ம் ஆண்டு 44வது சட்டம் பிரிவு 6(2)ன் படி திரு.தி.கணேஷ், பி.ஏ.,பி.எல்., சார்பு நீதிபதி அவர்களால் ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர். திரு.பாலசுந்தரம் த/பெ. ஏழுமலை | நாள் 13.11.2025 |
| வயது. 51 | தொழில் |
| கிராமம். ஆலஞ்சேரி | வட்டம். |

<u>மனுதாரர் சா.1 அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு மனுதாரர்கள் தரப்பில் முதல் நிலை விசாரணை செய்யப்படுகிறார்</u>

1. நான் மனுவில் மனுதாரர். நான் எனது முதன்மை விசாரணை வாக்குமூலத்தை தாக்கல் செய்கிறேன். அதில் கண்டுள்ள சங்கதிகள் நான் சொல்லிதான் எழுதப்பட்டது. அதில் உள்ள கையொப்பங்கள் என்னுடையதுதான். விபத்து சம்மந்தமான முதல் தகவல் அறிக்கை நகல் ம.த.சா.ஆ.1. செங்கப்ட்டு அரசு மருத்துவமனையில் வழங்கப்பட்ட வெளியேற்றுக் குறிப்புரை ம.த.சா.ஆ.2 வாசன் மருத்துவமனையில் வழங்கிய மருத்துவ குறிப்புரை ம.த.சா.ஆ.3. 30.08.2022 முதல் 17.09.2022 வரை செங்கல்பட்டு அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்றதற்கான வெளியேற்றுக் குறிப்புரை ம.த.சா.ஆ.4. 17.01.2023 முதல் 23.01.2023 வரை செங்கப்ட்டு அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்றதற்கான வெளியேற்றுக் குறிப்புரை ம.த.சா.ஆ.5. எனக்கு எடுக்கப்பட்ட ஸ்கேன் மற்றும் நுண்கதிர்ப்படம் ம.த.வா.ஆ. 6 மற்றும் 7. மருத்துவ செலவீனங்களுக்காகன ரசீதுகள் ம.த.சா.ஆ. 8. 1ம் எதிர்மனுதாரர் வாகனத்தின் பதிவு சான்றிதழ் நகல் ம.த.சா.ஆ.9. என்னுடைய ஆதார் அட்டை மற்றும் வங்கிக் கணக்குப் புத்தகத்தின் நகல்கள்(அசலுடன் ஒப்பிடப்பட்டது) ம.த.சா.ஆ. 10 மற்றும் 11. எனக்கு வழங்கப்பட்ட ஊனச் சான்றிதழ் ம.த.சா.ஆ. 12. மனுப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

2ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை

(வழக்கறிஞரின்வேண்டுகோளுக்கிணங்க ஒத்திவைக்கப்படுகிறது)